

தமிழ்நாடு அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், குடும்ப ஓய்வூதியதாரர்கள், ஓய்வூதியர்களுக்கு 3% விழுக்காடு உயர்த்தி வழங்கிய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பு சார்பில் நிறுவனத் தலைவர் சா.அருணன், நிர்வாகிகள் வெங்கடேசன், மகாதேவி, பரமேஸ்வரி, திருவேங்கடம், தேவராஜ், வாசு ஆகியோர் நன்றி தெரிவித்தனர்.



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (25.10.2024) முகாம் அலுவலகத்தில், திருநெல்வேலி நாடாளுமன்ற உறுப்பினர் செ.ராபர்ட் புரூஸ் மரியாதை நிமித்தமாக சந்தித்தார்.

### மதுரையில் கனமழை: மக்களுக்கு அனைத்து உதவிகள் –

# சீரமைப்புப் பணிகளை உடனே மேற்கொள்ள அமைச்சர்களுக்கு உத்தரவு!

## மாவட்ட ஆட்சியரிடம் மீட்பு – நிவாரணப் பணிகள் குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் தொலைபேசியில் கேட்டறிந்தார்!

சென்னை, அக்.27-

மதுரையில் கனமழை பெய்து வருவதை யொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மாவட்ட ஆட்சியரை தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு மீட்பு பணி மற்றும் நிவாரணப் பணிகள் குறித்து கேட்டறிந்ததுடன் அமைச்சர்கள் பி. மூர்த்தி, பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன் ஆகியோர் உடனடியாக மக்களுக்கு வேண்டிய உதவிகளையும், சீரமைப்பு பணிகளை மேற்கொள்ளவும் உத்தரவிட்டார்.

இது குறித்து தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு வருமாறு:-

மதுரையில் கனமழை பெய்து வருவதையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 25.10.2024 அன்று மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி மா.சௌ.சங்கீதா அவர்களை தொலைபேசி வாயிலாக தொடர்பு கொண்டு கனமழையை ஒட்டி மேற்கொள்ளப்பட்டு வரும் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகள் குறித்து கேட்டறிந்தார்.

பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் துரிதமாக மேற்கொள்ள வேண்டுமென்றும், களத்திற்கு சென்று சீரமைப்பு பணிகளை மேற்கொள்ளவும் வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் அவர்கள் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்.

இவ்வாறு தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடும்போது தொழில்நுட்பக் கோளாறுதான் ஏற்பட்டது!

# முதலமைச்சரின் புத்தாய்வுத் திட்டம் - இளைஞர்களைத் தேர்வு செய்யும் பணி தொடக்கம்!

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேட்டி!

சென்னை, அக்.27 -

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (25.10.2024) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு முதலமைச்சரின் புத்தாய்வுத் திட்டத்தின் கீழ் 19 இளம் வல்லுநர்களுக்கு "பொதுக் கொள்கை மற்றும் மேலாண்மையில்" முதுகலைச் சான்றிதழ்களை வழங்கினார்.

இந்நிகழ்ச்சிக்கு பின்னர் செய்தியாளர்களிடம் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தெரிவித்ததாவது,

இன்றைக்கு நம்முடைய திராவிட மாடல் அரசினுடைய முன்னெடுப்புகளில் ஒன்றான Tamil Nadu CM Fellowship Programme முதல் பேட்ச் நிறைவு செய்துள்ள இளைஞர்களுக்கு இன்று அவர்களுக்கான சான்றிதழ்களை வழங்கியுள்ளோம்.

2022 ஆம் ஆண்டு முதல் பாரதிதாசன் மேலாண்மை கல்வி நிறுவனத்துடன் இணைந்து இந்த திட்டம் செயல்படுத்தப்பட்டு வரு கின்றது, இதற்காக முதலமைச்சர் அவர்கள் வருடந்தோறும் 6.5 கோடி ரூபாய் நிதி ஒதுக்கி தந்துள்ளார்கள். தேர்ந்தெடுக்கப்பட்ட 30 பேரில் கோர்ஸ்ஸை நிறைவு செய்த 19 பேருக்கு இன்றைக்கு சர்ட்டிபிகெட்ஸ் வழங்கப்பட்டிருக்கிறது.

இந்த திட்டம் அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கு செயல்படுத்தப்படும்னு முதலமைச்சர் அவர்கள் தெரிவிச்சிருக்காங்க. தற்பொழுது இளைஞர்களை தேர்வு செய்யும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்த திட்டம் வெற்றிகரமாக நடைபெற அரசோடு கைகோர்த்து செயல்படும் திருச்சி பாரதிதாசன் மேலாண்மை கல்வி நிறுவனத்திற்கும், சென்னை அண்ணா நிர்வாக பணியாளர் கல்லூரிக்கும் என்னுடைய பாராட்டுக்களையும், நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்த திட்டம் இன்னும் சிறப்பாக செயல்பட காரணமாக இருந்த சிறப்புத் திட்ட செயலாக்கத்துறையினுடைய செயலாளர் தாரேஸ் அகமது அவர்களுக்கும், துணை செயலாளர் திரு.பிரதாப் அவர்களுக்கும் அனைத்து அரசு அலுவலர்களுக்கும், நிதித்துறை செயலாளர் அவர்களுக்கும், முதலமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

**தமிழ்த்தாய் வாழ்த்து: டெக்னிக்கல் ஃபால்ட்த்தான்!**

கேள்வி: தமிழ்த்தாய் வாழ்த்து ........

பதில்: தவறாகப் பாடப்படவில்லைங்க. சில டெக்னிக்கல் ஃபால்ட்த்தான். மைக் சரியா வேலை செய்யல. 2, 3 இடங்கள்ள குரல் கேட்கல. அவங்க பாடும்போது குரல் கேட்கல. அதனால மறுபடியும் முதல்ல இருந்து தமிழ்த்தாய் வாழ்த்து பாடப்பட்டது. அதன் பிறகு தேசிய கீதமும் முறையா பாடப்பட்டிருக்கிறது என்று தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தெரிவித்தார்.



கோவை கருமத்தம்பட்டியில் 24 புதிய தாழ்த்தள பேருந்துகளை தமிழ்நாடு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் செந்தில்பாலாஜி கொடியசைத்து துவக்கி வைத்தார். கோவை மாவட்டம் சூலூர் ஒன்றியத்துக்கு உட்பட்ட கருமத்தம்பட்டி பகுதியில் இருந்து மாநகருக்கு செல்வதற்கான 24 புதிய தாழ்தள பேருந்துகளை தமிழ்நாடு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் செந்தில்பாலாஜி கொடியசைத்து துவக்கி வைத்தார். இந்த புதிய பேருந்துகள் கருமத்தம்பட்டியில் இருந்து பல்வேறு மார்க்கமாக கோவை மாநகருக்கு செல்ல உள்ளது. இந்த நிகழ்ச்சியில், கோவை மாவட்ட ஆட்சியர் கிராந்திகுமார் பாடி, , மாநகராட்சி ஆணையாளர் சிவகுரு பிரபாகரன், ஒருங்கிணைந்த கோவை மாவட்ட தி.மு.க. செயலாளர்கள் தளபதி முருகேசன், நா.கார்த்திக், தொ.அ.ரவி, மேயர் ரங்கநாயகி, துணைமேயர் வெற்றிச்செல்வன், அரசு போக்குவரத்துக் கழகம் பொது மேலாளர் செல்வக்குமார், ஈரோடு பொதுமேலாளர் மோகன்குமார் , தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ஏர்போர்ட் ராஜேந்தர், LPF கனேசன் ஒன்றிய செயலாளர் அன்பரசு உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### நீட் நுழைவுத் தேர்வில் 613 மதிப்பெண் பெற்று தனியார் மருத்துவக் கல்லூரியில் இடம்:

# மாணவி கனிஷ்காவிற்கு இளைஞரணி அறக்கட்டளை சார்பில் ரூ.2 லட்சம்!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் காசோலை வழங்கினார்!

சென்னை, அக்.27 -

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நீட் நுழைவுத் தேர்வில் 613 மதிப்பெண் பெற்று, தனியார் மருத்துவ கல்லூரியில் சேர்க்கை ஆணை பெற்ற மாணவி செல்வி கனிஷ்கா அவர்களின் மருத்துவ கல்விக்காக, இளைஞரணி அறக்கட்டளை சார்பில் ரூ.2 இலட்சத்திற்கான காசோலையினை வழங்கினார்.



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (25.10.2024) முகாம் அலுவலகத்தில், நீட் நுழைவுத் தேர்வில் 613 மதிப்பெண் பெற்று, செங்கல்பட்டு மாவட்ட தனியார் மருத்துவக் கல்லூரியில் சேர்க்கை ஆணை பெற்ற தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்த செல்வி கனிஷ்காவின் மருத்துவ கல்விக்காக இளைஞரணி அறக்கட்டளை சார்பில் ரூ.2 இலட்சத்திற்கான காசோலையினை வழங்கினார்.

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (25.10.2024) முகாம் அலுவலகத்தில், நீட் நுழைவு தேர்வில் 613 மதிப்பெண் பெற்று, செங்கல்பட்டு மாவட்ட தனியார் மருத்துவ கல்லூரியில் சேர்க்கை ஆணை பெற்ற தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்த செல்வி கனிஷ்கா அவர்களின் மருத்துவ கல்விக்காக இளைஞரணி அறக்கட்டளை சார்பில் ரூ.2 இலட்சத்திற்கான காசோலையினை வழங்கினார்.

தஞ்சை மாவட்டத்தில் விவசாய குடும்ப பின்னணி கொண்ட செல்வி கனிஷ்கா அவர்கள் 12 ஆம் வகுப்பு பொது தேர்வில் 599 மதிப்பெண்ணும், நீட் நுழைவுத் தேர்வில் 613 மதிப்பெண்ணும் பெற்றார். இவருக்கு செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகத்தில் உள்ள தனியார் மருத்துவக் கல்லூரியில் மருத்துவ பட்டபடிப்பு பயில சேர்க்கையாணை கிடைத்துள்ளது.

ஏழ்மையான விவசாய குடும்பத்தை சேர்ந்தவர் என்பதால் தனது படிப்பு செலவிற்கு உதவிட வேண்டி பல தொண்டு நிறுவனங்களை அணுகி உள்ளார், அதில் ஒன்றான ஆற்றுப்படை அறக்கட்டளையின் வழிகாட்டுதலில் தி.மு.கழக இளைஞரணி அறக்கட்டளைக்கு கோரிக்கை மனுவினை அளித்திருந்தார். உடனடியாக இக்கோரிக்கையினை ஏற்ற இளைஞரணி செயலாளரும், துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அக்கல்லூரி நிர்வாகத்தை தொடர்பு கொண்டு பேசி முதலாமாண்டிற்கான கல்வி கட்டணத்தில் ரூ.2 இலட்சம் குறைத்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொண்டார்.

மேலும், அடுத்து வரவுள்ள நான்கு ஆண்டுகளுக்கும் தொடர்ந்து கல்வி கட்டணத்தில் ரூ.2 இலட்சம் குறைத்துக் கொள்ளுமாறும் கேட்டுக் கொண்டார். இந்தாண்டு செல்வி கனிஷ்கா அவர்களின் மருத்துவக் கல்வி கட்டணத்திற்கு ரூ.2 இலட்சம் வழங்கினார். அடுத்து வர உள்ள நான்கு ஆண்டுகளுக்கும் தொடர்ந்து ரூ.2 இலட்சமும் இளைஞரணி அறக்கட்டளை சார்பில் வழங்கப்பட உள்ளது.

இந்நிகழ்வின்போது, ஆற்றுப்படை அறக்கட்டளையின் நிறுவனர் மருத்துவர் கார்த்திகேயன் உடனிருந்தார்.

### கொள்ளிடம் ஆற்றினை நீராதாரமாகக் கொண்டு

# பெரம்பலூருக்கு ரூ.345.78 கோடி மதிப்பீட்டில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

சென்னை, அக்.27 -

கொள்ளிடம் ஆற்றினை நீராதாரமாகக் கொண்டு, பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள பெரம்பலூர் நகராட்சி, சிப்காட் எறையூர் மற்றும் பாடலூர் தொழிற்பூங்காவிற்கு கூட்டுக் குடிநீர்த் திட்டத்தினை ரூ.345.78 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

இதுகுறித்து அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு வருமாறு :

தமிழ்நாடு அரசு, வரவு செலவு கூட்டத் தொடரின் போது கொள்ளிடம் ஆற்றினை நீராதாரமாகக் கொண்டு பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள பெரம்பலூர் நகராட்சி, சிப்காட் எறையூர் மற்றும் பாடலூர் தொழிற்பூங்காவிற்கு, ரூ.366.00 கோடி மதிப்பீட்டில் 65,000 மக்கள் பயனடையும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்படும் என அறிவித்தது.

இத்திட்டம், பெரம்பலூர் நகராட்சிக்கு நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு

135 லிட்டர் என்ற அளவில் தினசரி 12.34 மில்லியன் லிட்டர் மற்றும் சிப்காட் எறையூர் 1.65 மில்லியன் லிட்டர் மற்றும், பாடலூருக்கு 2.20 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்குத் தேவையான நீர் கொள்ளிடம் ஆற்றில் நொச்சியம் அருகில் அமைக்கப்படும், 1 நீர் சேகரிப்பு கிணறு மற்றும் 2 நீர் உறிஞ்சு கிணறுகள் மூலம் பெறப்பட்டு பெரம்பலூர் நகராட்சிக்கு குடிநீர் வழங்கப்படும். இத்திட்டத்தின் மூலம், 14,706 வீட்டு குடிநீர் இணைப்புகள் வழங்கப்பட்டு 65,000 மக்கள் பயன்பெறுவர்.

முதலமைச்சர் அவர்கள், இத்திட்டத்தினை ரூ. 345.78 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு நகர்ப்புர உட்கட்டமைப்பு மேம்பாட்டு கழகத்திடமிருந்து கடன் (TUIFDCO Loan), கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டு திட்டம் (KNMT) மற்றும் தமிழ்நாடு அரசின் மானியம் (GoTN one time Grant), ஆகிய நிதியாதாரங்களின் கீழ் செயல்படுத்த நிர்வாக ஒப்புதல் வழங்கி ஆணையிட்டுள்ளார்கள்.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் செயல்படுத்தப்படவுள்ள இத்திட்டம், பெரம்பலூர் நகராட்சி மற்றும் சிப்காட் எறையூர் மற்றும் பாடலூர் தொழிற்பூங்கா ஆகியவற்றின் குடிநீர் தேவையை மேலும் திறம்பட எதிர்கொள்ளும் வகையில் அமைகிறது.

இவ்வாறு தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.



சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் தலைமையில் சேலம் மாவட்டம், ஏற்காடு ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் மக்கள் சந்திப்பு திட்ட முகாம் 25.10.2024 அன்று நடைபெற்றது. உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி, கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர் தே.மலையரசன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர். சிவலிங்கம், சேலம் வருவாய் கோட்டாட்சியர் திருமதி அ.அபிநயா உள்ளிட்ட அனைத்துத்துறை அரசு அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்ளனர்.